லட்சத்தீவு அருகே ரூ.3,000 கோடி போதைப் பொருள்கள் பறிமுதல்

5 பாகிஸ்தானியர்கள் கைது

லட்சத்தீவு அருகே படகில் கடத்தி வரப்பட்ட போதைப் பொருளை பறிமுதல் செய்து, கடத்தல்காரர்களையும் கைது செய்த பாதுகாப்புப் படையினர்.

அகமதாபாத், செப். 30: ஈரானிய படகில் இந்தியாவுக்கு கடத்தி வரப்பட்ட ரூ.3,000 கோடி மதிப்பிலான மெத்தம்பெட்டமைன் மற்றும் ஹெராயின் போதைப் பொருள்களை லட்சத்தீவு அருகே இந்திய கடலோரக் காவல் படையும், குஜராத் மாநில தீவிரவாத தடுப்புப் படையினரும் கூட்டாகப் பறிமுதல் செய்தனர். மேலும் 5 பாகிஸ்தானியரையும் அவர்கள் கைது செய்தனர்.

இதுகுறித்து அதிகாரிகள் தெரிவித்ததாவது: ஈரானிய படகில் போதைப் பொருள்கள் கடத்தி வரப்படுவதாக குஜராத் தீவிரவாத தடுப்புப் படை மற்றும் மத்திய புலனாய்வு அமைப்புகளிடம் இருந்து இந்திய கடலோரக் காவல் படைக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து, இந்திய கடலோரக் காவல் படையும், குஜராத் தீவிரவாத தடுப்புப் படையினரும் அரேபிய கடல் பகுதியில் கடந்த 14-ஆம் தேதி முதல் தொடர்ந்து 10 நாள்கள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், கடந்த 25-ஆம் தேதி மாலை லட்சத்தீவு அருகே சந்தேகப்படும்படி ஈரானிய படகு வந்தது. அந்தப் படகை அவர்கள் வழிமறித்து சோதனை நடத்தினர். இதில், அந்தப் படகில் உயர்ரக மெத்தம்பெட்டமைன் மற்றும் ஹெராயின் போதைப் பொருள்கள் இருப்பது தெரிய வந்தது. இதைத் தொடர்ந்து, படகுடன், அதில் இருந்த 5 பாகிஸ்தானியரையும் மும்பைக்கு அழைத்து வந்தனர்.

இதுகுறித்து அகமதாபாதில் செய்தியாளர்களுக்கு குஜராத் தீவிரவாத தடுப்புப் படை துணை ஐ.ஜி. சுனில் ஜோஷி அளித்த பேட்டியின்போது மேலும் கூறியதாவது:

ஈரானில் இருந்து இந்தியாவுக்கு கடல் வழியாக படகில் போதைப் பொருள்கள் கடத்தி வரப்படுவதாக ரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து, கடலில் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டோம். அப்போது, சந்தேகத்துக்கு உரிய வகையில் வந்த 'ஆசாத்' என்ற பெயர் கொண்ட படகை சோதனை நடத்தி, அதிலிருந்த போதைப் பொருள்களைப் பறிமுதல் செய்தோம். படகில் கடத்தி வரப்பட்ட இந்த போதைப் பொருள்களை லட்சத்தீவு மற்றும் மும்பை இடையே நடுக்கடலில் வைத்து மற்றொரு தரப்புக்கு வழங்க அவர்கள் திட்டமிட்டிருந்தனர். பிறகு அது தமிழகத்துக்கு கொண்டு செல்ல திட்டமிடப்பட்டிருந்தது விசாரணையில் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட 5 பாகிஸ்தானியரும் பெஷாவரைச் சேர்ந்தவர்கள். ஈரானின் கோனார்க் துறைமுகத்தில் இருந்து சிறிய படகில் முதலில் வந்து, பிறகு பாகிஸ்தானின் குவாடர் துறைமுகத்தில் ஈரானிய படகில் அதை ஏற்றிக் கொண்டுவந்துள்ளனர். அவர்கள் அனைவரும் சர்வதேச போதைப் பொருள் கடத்தல் கும்பலான ஹாஜி சலிம் குழுவைச் சேர்ந்தவர்கள். தமிழகத்துக்கு அந்தப் போதைப் பொருள்கள் வந்ததும், அதை பஞ்சாபுக்கு கொண்டு சென்று, நைஜீரிய நபரிடம் அளிக்கத் திட்டமிட்டிருந்தனர்.

குஜராத்தைச் சேர்ந்த நபருக்கு இக்கடத்தலில் தொடர்பிருக்கலாம் எனச் சந்தேகிக்கிறோம். அவரைத் தேடும் பணியில் குஜராத் தீவிரவாத தடுப்புப் படையும், பிற விசாரணை அமைப்புகளும் ஈடுபட்டுள்ளன என்றார் ஜோஷி.

நீரவ் மோடியின் சொகுசு வீடு விற்பனை: பிரிட்டன் நீதிமன்றம் அனுமதி

லண்டன், செப்.30: பிரிட்டன் தலைநகர் லண்டனில் உள்ள தொழிலதிபர் நீரவ் மோடியின் சொகுசு வீட்டை விற்பனை செய்ய அந்நாட்டு நீதிமன்றம் அனுமதி அளித்து தீர்ப்பளித்துள்ளது.

பஞ்சாப் நேஷனல் வங்கியில் சுமார் ரூ.13,000 கோடி கடன் மோசடி செய்த வைர வியாபாரி நீரவ் மோடி, பிரிட்டன் தப்பிச் சென்றார். அந்நாட்டுத் தலைநகர் லண்டனில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ள அவரை, இந்தியா கொண்டுவர மத்திய அரசு தொடர்ந்து முயற்சித்து வருகிறது.

இந்நிலையில், மத்திய லண்டனில் உள்ள அவரின் சொகுசு வீட்டை ட்ரைடன்ட் ட்ரஸ்ட் கம்பெனி (சிங்கப்பூர்) பாதுகாத்து நிர்வகித்து வந்தது. இந்த வீடு தொடர்பான வழக்கு லண்டன் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. முன்னதாக இந்த வழக்கு விசாரணையின்போது சிறையில் இருந்து காணொலி வழியாக ஆஜரான நீரவ் மோடி, வீட்டை விற்க எதிர்ப்புத் தெரிவித்தார்.

இந்த வழக்கில் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை அளித்த தீர்ப்பில், 'நீரவ் மோடி வீடு விவகாரத்தில், நிலுவையில் உள்ள கடன்களை அடைக்க வேண்டும் என்பதே அடிப்படை விஷயமாகும்.

எனவே, அந்த வீட்டை குறைந்தபட்சம் 3.75 மில்லியன் பவுண்டுகளுக்கு (சுமார் ரூ.47.75 கோடி) விற்பனை செய்ய அனுமதிக்கப்படுகிறது' என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

காஷ்மீரில் சுட்டுக் கொல்லப்பட்டவர் லஷ்கர்-ஏ-தொய்பா கமாண்டர்

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலில் தொடர்புடையவர்

ஸ்ரீநகர், செப். 30: ஜம்மு-காஷ்மீரில் பாதுகாப்புப் படையினருடன் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் சுட்டுக் கொல்லப்பட்டவர் லஷ்கர்-ஏ-தொய்பா பயங்கரவாத அமைப்பின் மூத்த கமாண்டரும், பாகிஸ்தான் முன்னாள் அதிபர் முஷாரப்பின் பாதுகாவலரும், பாகிஸ்தான் முன்னாள் ராணுவ அதிகாரியுமான முகம்மது ஆசிப் என்பது தெரியவந்துள்ளது.

கடந்த 5 ஆண்டுகளாகத் தேடப்பட்டு வந்த அவர் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பது, லஷ்கர் பயங்கரவாத அமைப்புக்கு பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது.

இதுகுறித்து பாதுகாப்புப் படை அதிகாரிகள் புதன்கிழமை கூறியதாவது: கடந்த 2025-ஆம் ஆண்டு அனந்த்நாக் மாவட்டம் பஹல்காமில் சுற்றுலாப் பயணிகளைக் குறிவைத்து பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தியதில் 26 பேர் உயிரிழந்தனர். மேலும் 20 பேர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகள் தப்பியோடிவிட்டனர். அவர்களை பாதுகாப்புப் படையினர் தேடி வந்தனர்.

இதேபோல் குல்மார்க்கில் 2024-ஆம் ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதலில் 2 ராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். மேலும் இருவர் காயமடைந்தனர். அதே அக்டோபர் மாதம் கந்தர்பாலில் நடைபெற்ற தாக்குதலில் 7 பொதுமக்கள் உயிரிழந்தனர். 2023-ஆம் ஆண்டு டிசம்பரில் ராணுவ வீரர்களின் 2 வாகனங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 4 வீரர்கள் உயிரிழந்தனர். மூவர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல்கள் தொடர்பாகவும், இதுபோல ஜம்மு-காஷ்மீரில் நடைபெற்ற மேலும் பல்வேறு பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பாகவும் லஷ்கர்-ஏ-தொய்பா கமாண்டர் முகம்மது ஆசிப்பை பாதுகாப்புப் படையினர் கடந்த 5 ஆண்டுகளாகத் தேடி வந்தனர்.

இந்நிலையில், யூசுஃப்மார்க்கில் உள்ள கோராக் பகுதியில் பதுங்கியிருந்த பயங்கரவாதிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே செவ்வாய்க்கிழமை இரவு துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. இந்தச் சண்டையில், முகம்மது ஆசிப் சுட்டுக் கொல்லப்பட்டார். அவருக்கு மூசா, ஆசிப் ஃபாஜி, சுலைமான் ஆகிய பெயர்களும் உண்டு.

பாகிஸ்தான் முன்னாள் ராணுவ அதிகாரி: பாகிஸ்தான் ராணுவத்தில் 23 ஆண்டுகள் பணிபுரிந்த முகமது ஆசிப், அதில் 18 ஆண்டுகள் சிறப்புப் படை அதிகாரியாக (எஸ்எஸ்ஜி) பணிபுரிந்துள்ளார். பாகிஸ்தான் முன்னாள் அதிபர் முஷாரஃப்பின் பாதுகாப்புப் படை அதிகாரியாக 2006 முதல் 2008-ஆம் ஆண்டு வரை பணிபுரிந்துள்ளார்.

தனது பணிக்காலத்தின்போது, அமெரிக்கா சென்று மிக முக்கிய நபர்களுக்கு எப்படி பாதுகாப்பு கொடுப்பது என்பது குறித்து சிறப்புப் பயிற்சி பெற்றுள்ளார். மேலும், அமெரிக்காவில் மருத்துவப் படிப்பையும் முடித்துள்ளார். பாகிஸ்தான் ராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு, பயங்கரவாத அமைப்பில் சேர்ந்து, பயங்கரவாதிகளுக்கு பயிற்சி அளித்து வந்துள்ளார். அதன் பிறகு பாகிஸ்தானில் இருந்து இந்தியாவின் ஜம்மு-காஷ்மீருக்குள் 2021-ஆம் ஆண்டு ஊடுருவி லஷ்கர்-ஏ-தொய்பா கமாண்டராக அந்த அமைப்பு பயங்கரவாதிகளுக்கு தலைமை வகித்து செயல்பட்டு வந்தார்.

பல்வேறு தாக்குதல்களில் தொடர்புடையவர்: 2023-ஆம் ஆண்டு பீர் பாஞ்சால் தாக்குதல் முதல் பஹல்காம் தாக்குதல் வரை ராணுவம், பொதுமக்களைக் குறிவைத்து நடைபெற்ற பல்வேறு தாக்குதல்களுக்கும் மூளையாகச் செயல்பட்டுள்ளார். இதற்காக அவரை கடந்த 5 ஆண்டுகளாக பாதுகாப்புப் படையினர் தேடி வந்தனர். தற்போது அவர் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பது பாதுகாப்புப் படையினருக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும்.

5-ஆவது பயங்கரவாதி சுட்டுக் கொலை: பட்காம், உதம்பூர், தோடா மாவட்டங்களில் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 5-ஆவது மிகப் பெரிய பயங்கரவாதி ஆசிப் ஆவார். இது லஷ்கர் பயங்கரவாத அமைப்புகளுக்கு பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது. ஏற்கெனவே ஆசிப்பின் கூட்டாளி என்று கூறப்படும் யாசிர் கடந்த 5-ஆம் தேதி பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டார் என்றனர்.

மத்திய உள்துறை அமைச்சகம் அறிக்கை: மத்திய உள்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆசிப் கொல்லப்பட்டிருப்பது லஷ்கர் அமைப்புக்கு பெருத்த பின்னடைவு எனக் கூறப்பட்டுள்ளது.

இந்தியர் உள்பட ஐவரை சுட்டுக் கொன்ற சோமாலியா கடற்கொள்ளையர்கள்

கடத்தல் கப்பலை பாதுகாப்புப் படை மீட்டதால் ஆத்திரம்

துபை, செப். 30: கடத்தல் எண்ணெய்க் கப்பலை சோமாலியா ராணுவம் மீட்ட நிலையில், ஆத்திரத்தில் ஓர் இந்தியர் உள்பட ஐவரை கடற்கொள்ளையர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை சுட்டுக் கொன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சோமாலியா தலைநகர் மொகதீசை நோக்கி கடந்த ஏப்ரல் மாதம் 21-ஆம் தேதி எம்.டி. ஹானர் 25 என்ற எண்ணெய்க் கப்பல் சென்றுகொண்டிருந்தது. கப்பலில் 18,500 பீப்பாய்களில் கச்சா எண்ணெய் இருந்தது. அப்போது அந்தக் கப்பலை சோமாலியா கடற்கொள்ளையர்கள் நடுக்கடலில் கடத்திச் சென்றனர்.

கடத்தப்பட்ட அந்தக் கப்பலில் 17 மாலுமிகள் இருந்தனர். அவர்களில் 10 பேர் பாகிஸ்தானியர். எஞ்சிய 7 பேரில் நால்வர் இந்தோனேசிய நாட்டினர், இருவர் இந்தியர், ஒருவர் மியான்மர் நாட்டைச் சேர்ந்தவர்.

அந்தக் கப்பலை பந்தர் பெய்லா மாவட்டம், தாரின்பாரில் உள்ள கடல்பகுதியில் கடற்கொள்ளையர்கள் நிறுத்தி வைத்திருந்தனர். இந்நிலையில், சோமாலியாவின் புன்ட்லேண்ட் சுயாட்சியை பகுதியை சேர்ந்த பாதுகாப்புப் படையினர் கப்பலை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். கப்பலுக்குள் அதிரடியாக நுழைந்து அதை பாதுகாப்புப் படையினர் மீட்டனர்.

முன்னதாக, அந்த கப்பலில் இருந்த மாலுமிகளில் ஐவரை கடற்கொள்ளையர்கள் சுட்டுக் கொன்றனர். அவர்களில் ஒருவர் இந்தியர், மூவர் பாகிஸ்தானியர், மற்றொருவர் மியான்மர் நாட்டைச் சேர்ந்தவர். கடற்கொள்ளையர்கள் தாக்கியதில் 3 பாகிஸ்தானியரும் ஒரு இந்தியரும் காயமடைந்தனர்.

இதுகுறித்து சமூக வலைதளப் பக்கத்தில் புன்ட்லேண்ட் பாதுகாப்புப் படையினர் வெளியிட்டுள்ள பதிவில், 'கடற்கொள்ளையரால் கடத்திச் செல்லப்பட்டு சிறைபிடித்து வைக்கப்பட்டிருந்த எம்.டி. ஹானர் 25 கப்பலை மீட்டுவிட்டோம். அந்தக் கப்பல் தற்போது பாதுகாப்பாக புன்ட்லேண்ட் அரசிடம் உள்ளது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எத்தியோப்பியாவில் 3 இந்தியர்கள் மாயம்: கடத்தப்பட்டதாக குடும்பத்தினர் தகவல்

மெக்சானா, செப். 30: எத்தியோப்பியாவில் 2 பெண்கள் உள்ளிட்ட 3 இந்தியர்கள் காணாமல்போன நிலையில், அவர்கள் கடத்தப்பட்டுவிட்டதாகவும், அவர்களை விடுவிக்க கடத்தல்காரர்கள் ரூ.1 கோடி கேட்டு மிரட்டுவதாகவும் குடும்பத்தினர் கவலை தெரிவித்துள்ளனர்.

குஜராத் மாநிலம் அகமதாபாத், காந்திநகரைச் சேர்ந்த உறவினர்களான ருத்விக் ஜான்சரி, மம்தா சாவ்தா, மயூரி ஆகியோர் மெக்சானா மாவட்டத்தைச் சேர்ந்த பயண முகவர் மூலம் அமெரிக்காவுக்கு சட்டவிரோதமான வழியில் சென்றனர். அமெரிக்காவுக்கு செல்லும் வழியில் ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான எத்தியோப்பியாவுக்கு 3 பேரும் சென்றுள்ளனர்.

அங்கு கடந்த 22-ஆம் தேதிக்குப் பிறகு அவர்கள் குறித்த தகவல் இல்லை. காணாமல் போய்விட்டனர். எனினும், குஜராத் மாநிலத்தில் உள்ள அவர்களின் குடும்பத்தினர், மூவரையும் எத்தியோப்பியாவில் மர்ம நபர்கள் கடத்திச் சென்றுவிட்டதாகவும், ரூ.1 கோடி கேட்டு மிரட்டல் விடுப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மம்தாவின் தந்தை கிரித்பால் சௌஹான் கூறுகையில், 'மூவரையும் அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்ல முகவருக்கு தலா ரூ.70 லட்சம் கொடுத்துள்ளோம். ஆதலால், தற்போது எங்கள் கைகளில் பணமில்லை. இந்த விவகாரத்தில் மத்திய அரசு தலையிட்டு மூவரையும் மீட்டு திரும்ப அழைத்து வர வேண்டும்' என்றார்.

ருத்விக்கின் தாத்தா கனுபாய் கூறுகையில், 'மூவரையும் விடுவிக்க ரூ.1 கோடி கேட்டு கடத்தல்காரர்கள் மிரட்டல் விடுத்துள்ளனர். இதில் ரூ.60 லட்சத்தை கடத்தல்காரர்களிடம் ஏற்கெனவே நாங்கள் கொடுத்து விட்டோம்' என்றார்.

மூவரும் கடத்தப்பட்டதாக லால்ஹன்ஜ் காவல்நிலையத்தில் மம்தாவின் தந்தை புகார் அளித்துள்ளார்.

HDFC BANK
We understand your world

HDFC Bank Limited,
Head Office: HDFC Bank House,
Senapati Bapat Marg,
Lower Parel (West), Mumbai - 400 013
Department for Special Operations: 768 & 769, 5வது தளம்,
"A" விங், பேஸ்-III, ஸ்பென்சர் பிளாசா, அண்ணா சாலை, சென்னை-600002

சுவாதீன அறிவிப்பு

(Under Sec. 13(4) & as per Appendix IV read with rule 8(1) of the Security Interest Enforcement Rules, 2002)

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம். 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள், 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002) (Security Interest (Enforcement) Rules, 2002) கீழ் HDFC வங்கி லிமிடெட்-ன் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவர் மூலம், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(12) விதி 3-ன் கீழ், **02.07.2026 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட கடன் தொகையான 30.06.2026** அன்றுள்ளபடி **₹ 7,31,80,142.10** (ரூபாய் ஏழு கோடியே முப்பத்தொன்று லட்சத்து எண்பதாயிரத்து நூற்று நாற்பத்திரண்டு மற்றும் பைசா பத்து மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகளுடன் அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று **கடன்தாரர்: 1.M/s.ஸ்ரீ தேவ் ஜூவலஸ், Mr.R.இந்திராணி தேவா (உரிமையாளர்),** 1வது தளம், பழைய எண்.6, புதிய எண்.15, ராமேஸ்வரம் ரோடு, தி.நகர், சென்னை-600017 **உரிமையாளர் / அடமானதாரர்: 2.Mr.R.இந்திராணி தேவா,** S/o.ரமேஷ் பாபு, **ஜாமீன்தாரர்: 3.Mrs.சந்தனா.D,** W/o.Mr.R.இந்திராணி தேவா, **இருவாது முகவரி,** 1வது தளம், பழைய எண்.6, புதிய எண்.15, ராமேஸ்வரம் ரோடு, திநகர், சென்னை-600017 **ஜாமீன்தாரர்: 4.Mrs.சந்தனா.D,** W/o.Mr.R.இந்திராணி தேவா, **மேலும் முகவரி,** 2/6-A, பிள்ளையார் கோயில் தெரு, சாந்தி நகர் மெயின் ரோடு, ராமாபுரம், திருவள்ளூர்-600089 ஆகியோருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

கடன்தாரர் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்தாரர்கள், கூட்டாளிகள், ஜாமீன்தாரர்கள் & அடமானதாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(4) விதி 9-ன் படி **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை 29.09.2026 தேதியன்று கீழே கையொப்பமிட்ட HDFC வங்கி லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சார்பாக உடைமையாக்கியுள்ளார்.**

இது முதற்கொண்டு கடன்தாரர்களோ கூட்டாளிகளோ, ஜாமீன்தாரர்களோ & அடமானதாரர்களோ அல்லது மற்ற பொதுமக்களோ இந்த சொத்துக்களில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக் கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது HDFC வங்கி லிமிடெட்-க்கு வர வேண்டிய மேலே குறிப்பிட்டுள்ள கடன்தொகை மற்றும் வட்டி, இதர செலவுகளுக்கு கட்டுப்பட்டவை என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) மற்றும் விதி 8(6) ஷரத்துக்களின் மீது கடன்தாரர்கள் / கூட்டாளிகள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

சொத்துக்கள் விபரம்

ஐட்டம் எண்.1: T.S.எண்.96, பழைய சர்வே எண்.100, (பழைய பட்டா எண்.5989 சர்வே எண்.100/130), **மனை எண்.43, வார்டு எண்.N, ப்ளாக் எண்.2, கதவு எண்.43, M.G.R.ரோடு, பெரியார் நகர், பம்மல் கிராமம், பல்லாவரம் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம்** என்னும் முகவரியில் வடக்கு பக்கம்: 80 அடி, தெற்கு பக்கம்: 80 அடி, கிழக்கு பக்கம்: 45 அடி, மேற்கு பக்கம்: 45 அடி **ஆக மொத்தம் 3600 சதுர அடி நிலம் அதிலுள்ள RCC கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: மனை எண்.44, தெற்கு: மனை எண்.42, கிழக்கு: 40 அடி ரோடு, மேற்கு: மனை எண்.50.

ஐட்டம் எண்.2: பழைய சர்வே எண்.127/1, பட்டா படி புதிய சர்வே எண்.127/11, **பம்மல் கிராமம் முன்னர் தாம்பரம் மற்றும் ஆலந்தூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், தற்போது பல்லாவரம் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம், மனை எண்.15, கதவு எண்.5, VOC நகர், கஸ்தூரிபாய் தெரு, பம்மல், சென்னை - 600 075** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்: 40 அடி, 9 அங்குலம், கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்: 41 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம்: 56 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம்: 56 அடி **ஆக மொத்தம் 2289 சதுர அடி நிலம் அதிலுள்ள RCC கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: மனை எண்.20, தெற்கு: 20 அடி ரோடு, கிழக்கு: மனை எண்.17, மேற்கு: மனை எண்.15.

1 & 2 ஆகிய இரண்டு ஐட்டங்களும் தென் சென்னை பதிவு மாவட்டம், பம்மல் சார்-பதிவு மாவட்டத்தில் உள்ளது.

இடம்: சென்னை
தேதி: 29.09.2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
HDFC வங்கி லிமிடெட்

பாங்க் ஆஃப் பரோடா
बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

அடையாறு கிளை
எண்.1, 15வது குறுக்கு தெரு,
சாஸ்த்ரி நகர், அடையாறு, சென்னை – 600 020
தொலைபேசி: 044-23454379 / 380
மின்னஞ்சல் : adayar@bankofbaroda.co.in ;

அசையா சொத்துகளின் விற்பனைக்கான இ - ஏல அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை பத்திரமயமாக்குதல் மற்றும் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 (SARFAESI ACT 2002) விதிகளின் கீழ் விதி 6 (2) & 8 (6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல்.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை பாங்க் ஆஃப் பரோடா அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு", "எந்த நிலைமில் உள்ளதோ அந்த நிலைமிலேயே" மற்றும் எந்த தீர்வும் இல்லை** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் ஜாமீன்தாரர் விவரம், நிலுவைத் தொகை, சொத்து விவரம், ரிசர்வ் விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர் பெயர் மற்றும் முகவரி : 1. திரு.சிட்டிலிங்கம் தேவேந்திரன், த/பெ சிட்டிலிங்கம், **2. திருமதி மாலா தேவேந்திரன்,** க/பெ. தேவேந்திரன், 18E, 6வது தெரு, புத்தர் நகர், புதிய பெருங்களத்தூர், பெருங்களத்தூர், காஞ்சிபுரம் - 600 063.

26.09.2026 தேதிப்படி நிலுவைத்தொகை : ரூ.34,55,364.22/- மேலும் 27.09.2026 தேதி முதல் வட்டி மற்றும் செலவுகள் மற்றும் ஏற்பட்ட அல்லது ஏற்படவிருக்கும் கட்டணங்கள் மீட்டெடுப்பைக் குறைத்தல்

நேரடி சுவாதீனம்

அசையா சொத்து விவரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின்: சொத்து விவரம் : காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் தாலுக்கா, குன்னப்பட்டு கிராமம், சர்வே எண் 80/3A, பட்டா எண் 876ன் 22.06.2017 தேதியிட்ட மனைப்பிரிவு அங்கீகார எண் 36/2017 செயலாக்க உத்தரவு எண் Na.Ka. எண்.1065/2017/ch.Regn, DTCP அங்கீகாரம் பெற்ற விக்டோரி ரைசிங் ஸைப பெயர் கொண்ட மனைப்பிரிவின் மனை எண் 41ன் 591 சதுர அடி பரப்பளவு கொண்ட காலி வீட்டுமனை அதன் துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள் : தெற்கில் : மனை எண்.40, வடக்கில் : மனை எண்.42, கிழக்கில் : 23 அடி அகல சாலை, மேற்கில் : காலி நிலம். இச்சொத்து செங்கல்பட்டு பதிவு மாவட்டம், திருக்கழுக்குன்றம் சார்பதிவு மாவட்டம் செங்கல்பட்டு பஞ்சாயத்து எல்லையில் உள்ளது. CERSAI ID: SECURITY INTEREST ID: 400075110727 Property ID : BARBADAYARCITI26.

குறைந்தபட்ச நிர்ணய விலை : ரூ.24,69,000/- | டேவணித் தொகை : ரூ. Rs.2,46,900/- | ஏலத் தொகையை அதிகரித்தல் : ரூ.10,000/-

ஏலச் சொத்தினை பார்வையிட நாள் மற்றும் நேரம் : 14.10.2026; காலை 11.00 மணி முதல் பகல் 01.00 மணி வரை

மின் ஏலத் தேதி மற்றும் நேரம் : 22.10.2026 02.00 மணி முதல் 06.00 மணி வரை

விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை https://www.bankofbaroda.in/e-auction.htm, https://baanknet.in பார்க்கவும். மேலும் விலைக்குறிப்பீட்டாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, தொலைபேசி எண். 8142338633, 91339 04397; தொடர்பு கொள்ளலாம்.

இடம் : சென்னை ; தேதி : 30.09.2026
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பாங்க் ஆ.ஃப் பரோடா

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda
India's International Bank
119

பிராந்திய அலுவலக ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை (ROSARB)
சென்னை ரூரல் ரீஜியன், எண்.123, மெஸ்ஸனைன் தளம்,
துகார் டவர்ஸ், RL சாலை, எழும்பூர், சென்னை-600 008.
Phone: 044-28885428, E-mail: sarcmt@bankofbaroda.bank.in; Web: www.bankofbaroda.bank.in

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV - A யின்படி (விதி 6 (2) மற்றும் 8 (6) யை பார்க்கவும்)
2002-ம்ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் விதிகளின் கீழ் 8(6) & 6(2) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல்

கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **"எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் விவரம், நிலுவைத் தொகை, சொத்து விவரம், குறைந்த பட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ.எண்.1: கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களின் பெயர் & முகவரி: கடன்தாரர் 1) Ms. அங்கயற்கண்ணி, பிளாட் எண். F1, 1வது தளம், மனை எண். 56A, பாலாஜி அவென்யூ, நந்திவரம் - 603 202. **மேலும் ஒரு முகவரி:** C-18, 2வது தளம், 3/148, சோலை அபார்ட்மென்ட், மணப்பாக்கம், மவுண்ட் பூந்தமல்லி நெடுஞ்சாலை, நந்தம்பாக்கம், சென்னை-600089,.

மொத்த நிலுவைத் தொகை: 30.09.2026 அன்றுள்ளபடி ரூ. 59,46,678.73/- மேலும் 30.09.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய வட்டி பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவீனங்கள். | சுவாதீனம் நிலை : மெய்நிலை

அசையா சொத்தின் விரிவான விவரங்கள்: அட்டவணை -A கூடுவாஞ்சேரி பதிவு மாவட்டம் மற்றும் தாம்பரம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், தற்போது செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், நந்திவரம் கிராமத்தின் பழைய சர்வே எண்.378/1A, பழைய பட்டா எண்.5380, புதிய பட்டா எண்.9279 பட்டாவின் படி புதிய சர்வே எண்.378/7 இல் அடங்கிய அனுமதி எண்.C.S.A.R/D.T.P.M-87-494/L.P/341, இன் படி பாலாஜி அவென்யூ என்ற மனைபிரிவின் மனை எண்.56 மொத்த விஸ்தீரணம் 4155 சதுர அடி சொத்து, அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி மற்றும் முழுவதுமாக விவரிக்கப்பட்ட அட்டவணைச்சொத்து. மனை எண்.56A இன் கட்டிட அனுமதிபடி : நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகர ஊராட்சி, நிர்வாக அதிகாரி, 19-05-2017 தேதியிட்ட Ka.vu.எண். 22/2017-2018, ka.vu.எண்.235/2017. மனை எண்.56B இன் கட்டிட அனுமதிபடி : நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகர ஊராட்சி, நிர்வாக அதிகாரி, 31-05-2017 தேதியிட்ட Ka.vu.எண்.13/2017-2018, ka.vu.எண்.231/2017. **எல்லைகள்:** - வடக்கில் : 23 அடி சாலை, தெற்கில் : மனை எண்கள்.57 & 58, கிழக்கில் : காலி நிலம், மேற்கில் : 40 அடி சாலை **நாற்பரப்புகள்:** வடக்கில் : 65 அடி, தெற்கில் : 73 1/2 அடி, கிழக்கில் : 60 அடி, மேற்கில் : 60 அடி, அனைத்தின் கூட்டுப்பரப்பளவு 4155 சதுர அடி. Latitude 12.85309 Longitude 80.06308. **அட்டவணை -B (இதன் மூலம் தெரிவிக்கப்பட்ட சொத்து)** தாம்பரம் பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட மனை எண்.56, மொத்த விஸ்தீரணம் 4155 சதுர அடி காலி நிலத்தில் பிரிக்கப்படாத பங்கு 403.50 சதுர அடி, அதனுடன் பொது பரப்பு உட்பட, முதல் தளத்திலுள்ள 1004 சதுர அடி கட்டிடபரப்பு கொண்ட பிளாட் எண்.F-1, (ஒரு மூடிய கார்நிறுத்துமிடம், பொதுப்பரப்பு உட்பட, (E.B இணைப்பு எண்.09-583-003-1796).

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 41,09,000/- | டேவணித் தொகை ₹ 4,10,900/- | ஏல உயர்வு தொகை ₹ 25,000/-

வ.எண்.2: கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களின் பெயர் & முகவரி: கடன்தாரர் 1) Ms. விஜயலட்சுமி கண்ணன், பிளாட் எண். F3, 1வது தளம், மனை எண்.56B, பாலாஜி அவென்யூ, நந்திவரம் - 603 202. **மேலும் ஒரு முகவரி:** எண்.23, மாணிக்கவாசகர் தெரு, விவேகானந்தபுரம், அருள் நகர், கூடுவாஞ்சேரி - 603 202.

மொத்த நிலுவைத் தொகை: 30.09.2026 அன்றுள்ளபடி ரூ. 61,23,200.41/- மேலும் 30.09.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய வட்டி பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவீனங்கள். | சுவாதீனம் நிலை : மெய்நிலை

அசையா சொத்தின் விரிவான விவரங்கள்: அட்டவணை -A கூடுவாஞ்சேரி பதிவு மாவட்டம் மற்றும் தாம்பரம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், தற்போது செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், நந்திவரம் கிராமத்தின் பழைய சர்வே எண்.378/1A, பழைய பட்டா எண்.5380, புதிய பட்டா எண்.9279 பட்டாவின் படி புதிய சர்வே எண்.378/7 இல் அடங்கிய அனுமதி எண்.C.S.A.R/D.T.P.M-87-494/L.P/341, இன் படி பாலாஜி அவென்யூ என்ற மனைபிரிவின் மனை எண்.56 மொத்த விஸ்தீரணம் 4155 சதுர அடி சொத்து, அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி மற்றும் முழுவதுமாக விவரிக்கப்பட்ட அட்டவணைச்சொத்து. மனை எண்.56A இன் கட்டிட அனுமதிபடி : நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகர ஊராட்சி, நிர்வாக அதிகாரி, 19-05-2017 தேதியிட்ட Ka.vu.எண். 22/2017-2018, ka.vu.எண்.235/2017. மனை எண்.56B இன் கட்டிட அனுமதிபடி : நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகர ஊராட்சி, நிர்வாக அதிகாரி, 31-05-2017 தேதியிட்ட Ka.vu.எண்.13/2017-2018, ka.vu.எண்.231/2017. **எல்லைகள்:** - வடக்கில் : 23 அடி சாலை, தெற்கில் : மனை எண்கள்.57 & 58, கிழக்கில் : காலி நிலம், மேற்கில் : 40 அடி சாலை **நாற்பரப்புகள்:** வடக்கில் : 65 அடி, தெற்கில் : 73 1/2 அடி, கிழக்கில் : 60 அடி, மேற்கில் : 60 அடி, அனைத்தின் கூட்டுப்பரப்பளவு 4155 சதுர அடி. Latitude 12.85309 Longitude 80.06308. **அட்டவணை -B (இதன் மூலம் தெரிவிக்கப்பட்ட சொத்து)** தாம்பரம் பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட மனை எண்.56, மொத்த விஸ்தீரணம் 4155 சதுர அடி காலி நிலத்தில் பிரிக்கப்படாத பங்கு 437 சதுர அடி, அதனுடன் பொது பரப்பு உட்பட, முதல் தளத்திலுள்ள 1088 சதுர அடி கட்டிடபரப்பு கொண்ட பிளாட் எண்.F-3, (ஒரு மூடிய கார்நிறுத்துமிடம், பொதுப்பரப்பு உட்பட, E.B இணைப்பு எண்.09-583-003-1804)

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 44,57,000/- | டேவணித் தொகை ₹ 4,45,700/- | ஏல உயர்வு தொகை ₹ 25,000/-

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்: 15.10.2026, மதியம் 01 மணி முதல் மாலை 5 மணி வரை

EMD தொகை செலுத்த கடைசி தேதி : 21-10-2026 அன்று பிற்பகல் 1.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பாக

மின் ஏல தேதி & நேரம் (வ.எண்.1 முதல் 2 வரை): 21.10.2026 அன்று மதியம் 2 மணி முதல் மாலை 6 மணி வரை | வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

விதிமுறைகள் & நிபந்தனைகள் அறிய இங்கு ஸ்கேன் செய்யவும்

மேலும் விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணையதளமான https://bankofbaroda.bank.in/e-auction & ஆன்லைன் விற்பனைக்கான https://baanknet.com. இணையதள இணைப்பை பார்வையிடலாம். மேலும் விருப்பமுள்ள ஏலதாரர்கள் அதிகாரப்பூர்வ அதிகாரியை தொலைபேசி: 044-28885428 எண்ணிலும் கைபேசி எண். 8940056367 ஆகிய எண்களிலும் தொடர்பு கொள்ளவும்

தேதி : 30.09.2026 ; இடம்: சென்னை
அதிகாரபூர்வ அதிகாரி, பேங்க் ஆஃப் பரோடா

கடன் வசூல் தீர்ப்பாயம் - III, சென்னை
6வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரி பவன்,
ஹடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 006.
DRC எண். 125/2026

தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட்,
திருவான்மியூர் கிளை ... சான்றிதழ் வைத்திருப்பவர்
- எதிரிடை -
M/s. சந்திரிகா பில்டர்ஸ் மற்றும் 3 பிறநபர்கள் ... சான்றிதழ் கடன்தாரர்கள்

கேட்பு அறிவிப்பு

(1961ம் வருடத்திய வருமான வரி சட்டம் இரண்டாம் அட்டவணை விதி 2-ன் கீழ் மற்றும் 1993-ம் வருடத்திய கடன் வசூல் மற்றும் திவால் சட்டம் (அந்தந்த காலத்திற்கு ஏற்ப திருத்தப்பட்டுள்ளது) பிரிவுகள் 25 முதல் 28 -ன் கீழ் அறிவிப்பு)

பெறுநர் :
1) **திருமதி. சந்திரிகா பில்டர்ஸ்,** பிரதிநிதியாக அதன் உரிமையாளர் V. அய்யாசாமி
எண்.2, ப்ளாட் எண்.3D, மங்கள்கிரஹா அப்பார்ட்மெண்ட்ஸ், 3-வது தளம்,
பஞ்சாயத்து 3-வது இணைப்பு சாலை, பெருங்குடி, சென்னை - 600 096.
2) **திரு. V. அய்யாசாமி,** த/பெ. வீரபத்திரன்,
எண்.2, ப்ளாட் எண்.3D, மங்கள்கிரஹா அப்பார்ட்மெண்ட்ஸ், 3-வது தளம்,
பஞ்சாயத்து 3-வது இணைப்பு சாலை, பெருங்குடி, சென்னை - 600 096.
3) **M/s. சாய் பைரவி பில்டர்ஸ்,** பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திருமதி A. ஸ்ரீவித்யா
17, சாய்நாத் பில்டிங், தரை தளம், மாருதி நகர், சீவரம், பெருங்குடி,
சென்னை - 600 096.
4) **திருமதி.A.ஸ்ரீவித்யா,** க/பெ. திரு.V. அய்யாசாமி,
எண்.2, ப்ளாட் எண்.3D, மங்கள்கிரஹா அப்பார்ட்மெண்ட்ஸ், 3-வது தளம்,
பஞ்சாயத்து 3-வது இணைப்பு சாலை, பெருங்குடி, சென்னை - 600 096.

1993ம் வருடத்திய கடன் வசூல் மற்றும் திவால் சட்டம் (அவ்வப்போது திருத்தப்பட்டது) பிரிவு 19 துணை பிரிவுகள் 7 மற்றும் 22ன் கீழ் T.A எண்.394/2023-ல் 07.11.2025 தேதியிட்ட உத்தரவின்படி **ரூ.1,34,23,367.70/- (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து நான்கு லட்சத்து இருபத்து மூன்றாயிரத்து முன்னூற்று அறுபத்து ஏழு மற்றும் பைசா எழுபது மட்டும்)** மொத்தமுள்ள இதில் ரூ.75,34,240.26/- அதனுடன் 21.07.2020 முதல் கடன் தொகை வசூலாகும் காலம் வரை வருடத்திற்கு 13.05% கூட்டு வட்டி மற்றும் ரூ.1,42,200.60/- அதனுடன் 27.01.2020 முதல் முழு கடன் தொகை வசூலாகும் காலம் வரை வருடத்திற்கு 13.55% கூட்டு வட்டி மற்றும் ரூ.5,17,472/- அதனுடன் 27.01.2020 முதல் முழு கடன் தொகை வசூலாகும் காலம் வரை வருடத்திற்கு 13.55% கூட்டு வட்டி மற்றும் ரூ.98,391.65/- அதனுடன் 27.01.2020 முதல் முழு கடன் தொகை வசூலாகும் காலம் வரை வருடத்திற்கு 24% கூட்டு வட்டி மற்றும் ரூ.1,27,887.03/- அதனுடன் 27.01.2020 முதல் முழு கடன் தொகை வசூலாகும் காலம் வரை வருடத்திற்கு 24% கூட்டு வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் சேர்த்து கடன் வசூல் சான்றிதழில் உள்ள விதிகளின்படி தாங்களிடமிருந்து வசூலிப்பதற்காக / செலுத்துவதற்காக சென்னை, கடன் வசூல் தீர்ப்பாயம்-3-ன் மாண்புமிகு முன்னிலை அதிகாரி அவர்களால் வசூல் சான்றிதழ் DRC எண்.125/2026, **22.06.2026** அன்று வழங்கப்பட்டது.

2. தாங்கள் மேற்படி தொகையை இந்த அறிவிப்பு பெறப்பட்ட **15 நாட்களுக்குள்** சான்றிதழ் வைத்திருக்கும் வங்கிக்கு செலுத்துமாறு கேட்டுகொள்ளப்படுகிறது, தவறும்பட்சத்தில் தற்போதுள்ள விதிகளின் படி கடன் வசூல் மேற்கொள்ளப்படும்.
3. சான்றிதழ் கடன்தாரர்கள் எண்.1 முதல் 4 ஆகியோர்களுக்கு கோரிக்கை அறிவிப்பு அனுப்பப்பட்டு பட்டுவாடா ஆகாமல் திரும்ப பெறப்பட்டது.
4. ஆகையால் இந்த தீர்ப்பாயம் மாற்றுமுறை சேவையாக ஒரு ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ் வாயிலாக விளம்பரப்படுத்த உத்தரவிட்டுள்ளது. தாங்கள் ஆஜராவதற்கு அடுத்த விசாரணை தேதி **16.10.2026 அன்று காலை 11.30 மணிக்கு** நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2026ம் வருடம் செப்டம்பர் மாதம் 21ம் தேதி அன்று எனது கையொப்பமிட்ட மற்றும் இந்த தீர்ப்பாயத்தின் முத்திரையின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.

(P. பிரேம் குமார்)
வசூல் அதிகாரி

Piramal
Finance

பிரமல் ஃபைனான்ஸ் லிட்.
CIN : U65910MH1984PLC032639
பதிவு அலுவலகம்: யூனிட் எண் 601, 6-ஆவது தளம், பிரமல் அமிதி பில்டிங், பிரமல் அகஸ்தியா கார்ப்பரேட் பார்க், கமணி ஜங்ஷன், தீயணைப்பு நிலையம் எதிரில், LBS மார்க், குர்லா (மேற்கு) மும்பை-400070. | **தொபே:** +91 22 3802 4000
கிளை அலுவலகம்: கல்பலதிக்கா டவர்ஸ்", மூன்றாவது தளம், புதிய எண்: 36, பழைய எண் 24, டாக்டர் அம்பேத்கர் சாலை, அசோக் நகர் பிரதான சாலை, கோடம்பாக்கம், சென்னை-600024. **தொடர்பு நபர்: 1. பிரமல் ஃபைனான்ஸ் லிட் - 022 - 69482444**

மின்- ஏல விற்பனை அறிவிப்பு - புதிய விற்பனை

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ், கீழே கையொப்பமிட்டுள்ள, **பிரமல் ஃபைனான்ஸ் லிட்.** (முன்னாள் **பிரமல் கேப்பிட்டல் & ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்.**) நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டு சொத்தை சுவாதீனம் எடுத்ததன் தொடர்ச்சியாக, கடன்தாரர்(கள்)-இடம் இருந்து நிலுவைத்தொகையை திரும்பப்பெறுவதற்காக, சுவாதீனத்தில் உள்ள கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தை **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ளது என்னவோ அது"** என்ற அடிப்படையில் வாங்குவதற்கான விலைகோரல்கள் வரவேற்கப்படுகின்றன. அதன் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

கடன் குறியீடு / கிளை / கடன்தாரர்(கள்) / கூட்டுக் கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்)	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் தொகை	சொத்து முகவரி_இறுதியானது	குறைந்தபட்ச விலை	டேவணித் தொகை (EMD) (குறைந்தபட்ச விலையில் 10%)	நிலுவைத் தொகை (30-09-2026)
கடன் குறியீட்டு எண்: 01000004618, சென்னை-கீழ்ப்பாக்கம் (கிளை), ராஜ்குமார் M G (கடன்தாரர்), தேவகி R (கூட்டுக் கடன்தாரர் 1)	நாள்: 18-08-2021, ரூ. 5515135/-, (ரூபாய். ஐம்பத்தைந்து லட்சத்து பதினைந்தாயிரத்து நூற்று முப்பத்தைந்து மட்டும்)	அனைத்து இன்றியமையாப் பகுதிகளும் பாகங்களும் கொண்ட சொத்து அமைவிடம் - மனை எண் 21 மேற்கு பகுதி, பொன்னம்மாள் நகர், நடுக்குத்தகை, திருநின்றவூர், சென்னை, சென்னை-602024 தமிழ்நாடு	ரூ.3680000/-, (ரூபாய். முப்பத்தாறு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்)	ரூ.368000/-, (ரூபாய். மூன்று லட்சத்து அறுபத்தெட்டாயிரம் மட்டும்)	ரூ.10475125.09/-, (ரூபாய். ஒரு கோடியே நான்கு லட்சத்து எழுபத்தைந்தாயிரத்து நூற்று இருபத்தைந்து மற்றும் ஒன்பது பைசா)
கடன் குறியீட்டு எண்: 08400000060, சென்னை - தேனாம்பேட்டை (கிளை), முரளி M (கடன்தாரர்),	நாள்: 17-08-2024, ரூ. 16973456.2/-, (ரூபாய். ஒரு கோடியே அறுபத்தொன்பது லட்சத்து எழுபத்துமூன்றாயிரத்து நானூற்று ஐம்பத்தாறு மற்றும் இருபது பைசா)	அனைத்து இன்றியமையாப் பகுதிகளும் பாகங்களும் கொண்ட சொத்து அமைவிடம் - S3 ஸ்ரீகிருஷ்ணா அபார்ட்மெண்ட்ஸ் 13, வெங்கடேஸ்வரா நகர் 1வது தெரு விரிவாக்கம், விருகம்பாக்கம் சென்னை சென்னை தமிழ்நாடு - 600092 எல்லைகள்:- வடக்கு :- மனை எண் 9 & 10 மேற்கு :- மனை எண் 12 கிழக்கு :- மனை எண் 14 தெற்கு :- 30' சாலை	ரூ.5990000/-, (ரூபாய். ஐம்பத்தொன்பது லட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்)	ரூ. 599000/-, (ரூபாய். ஐந்து லட்சத்து தொண்ணூற்றொன்பதாயிரம் மட்டும்)	ரூ.20313615.64/-, (ரூபாய். இரண்டு கோடியே மூன்று லட்சத்து பதின்மூன்றாயிரத்து அறுநூற்று பதினைந்து மற்றும் அறுபத்து நான்கு பைசா)
கடன் குறியீட்டு எண்: 08400001348, சென்னை - தேனாம்பேட்டை (கிளை), தாஜுதீன் A H (கடன்தாரர்), ஷிஃபானா T (கூட்டுக் கடன்தாரர் 1)	நாள்: 17-08-2024, ரூ. 4893205.16/-, (ரூ.நாற்பத்தெட்டு லட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து இருநூற்று ஐந்து மற்றும் பதினாறு பைசா)	அனைத்து இன்றியமையாப் பகுதிகளும் பாகங்களும் கொண்ட சொத்து அமைவிடம் - ஃபிளாட் எண் G2, தரைத்தளம், மனை எண் 20, 4வது குறுக்குத் தெரு, செந்தில் நகர், சீவரம், பெருங்குடி சென்னை தமிழ்நாடு - 600096 எல்லைகள்:- வடக்கு :- 4வது தெரு செந்தில் நகர் மேற்கு :- காலி நிலம் & சர்வே எண் 30 கிழக்கு :- திருமதி சிவகாமிக்கு சொந்தமான நிலம் தெற்கு :- விஸ்வநாதனுக்கு சொந்தமான நிலம்	ரூ.5720000/-, (ரூபாய் ஐம்பத்தேழு லட்சத்து இருபதாயிரம் மட்டும்)	ரூ.572000/-, (ரூபாய். ஐந்து லட்சத்து எழுபத்திரண்டாயிரம் மட்டும்)	ரூ.15068322.51/-, (ரூபாய். ஒரு கோடியே ஐம்பது லட்சத்து அறுபத்தெட்டாயிரத்து முந்நூற்று இருபத்திரண்டு மற்றும் ஐம்பத்தொரு பைசா)

மின் ஏல நாள் : 31.10.2026, முற்பகல் 11.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை (எண்ணிக்கை வரம்பின்றித் தலா 5 நிமிடக் காலநீட்டிப்புடன்), ஏலப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள்: 30.10.2026 மாலை 04.00 மணிக்கு முன்

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தயவுகூர்ந்து www.piramalfinance.com/e-Auction.html என்ற வலைத்தளத்தில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும் அல்லது எங்களுக்கு piramal.auction@piramal.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.

சர்ஃபாசி சட்டத்தின் கீழ், கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரருக்கு சட்டப்பூர்வமான 30 நாள் விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்/ஜாமீன்தாரருக்கு அறிவிக்கப்படுவது யாதெனில், பிரிவு 13(2) அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை நாளது தேதி வரையிலான மொத்த வட்டியுடன் ஏல நாளுக்கு முன்பாக முழுமையாக செலுத்த வேண்டும். தவறினால், சொத்து ஏலம் விடப்படும் / விற்கப்படும். மேலும் மீதி நிலுவைத்தொகை ஏதேனும் இருப்பின் கடன்தாரர் / ஜாமீன்தாரரிடம் இருந்து வட்டியுடன் மீட்கப்படும்,

மேற்சொன்ன சட்டம் பிரிவு 13 உட்பிரிவு (8)-இன் ஷரத்துகளின்படி, ஈட்டுறுதி சொத்துக்களை மீட்க உள்ள கால அவகாசம் தொடர்பாக கடன்தாரரின் கவனம் வரவேற்கப்படுகிறது. இதன்படி திட்டமிடப்பட்டுள்ள ஏலமானது ஏதேனும் ஒருகாரணத்தால் எவ்விதமாவது தோல்வியுற்றால் ஈடுபெற்றுக் கடனளித்தவர் தனி ஒப்பந்தம் மூலம் கடனீட்டு சொத்து மீது நடவடிக்கை எடுக்கக்கூடும் என்பதை குறிப்பாக கடன்தாரர்களும் பரவலாக பொதுமக்களும் கனிவுடன் கவனத்தில் கொள்ளவும்.

நாள்: 01.10.2026
இடம்: சென்னை RPU

ஒம்/- (அதிகாரப்பூர்வ அலுவலர்)
பிரமல் ஃபைனான்ஸ் லிமிடெட்.